**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073042
C

1. District : NAMAKKAL மாவட்டம் PS: V&AC, NAMAKKAL காவல்நிலையம் Year: 2018 ஆண்டு FIR No.: 14/AC/2018 மு.த.அ. எண் Date: 05.12.2018 நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as Sections பிரிவுகள்: 7(a) and 12
(ii) Act சட்டம்: amended by the Prevention Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 01.12.2018 at about 16-00 Hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 2) 04.12.2018 at about 17.30 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.12.2018 Time : நேரம் 15.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - IV 05.12.2018 Time : நேரம் 15.00 Hrs.

4. Type of Information : Written/ ~~Oral~~ : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக WRITTEN

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 35 kms WEST
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி 1) Tamilnadu State Transport Corporation's Tiruchengode Depot.
2) Tamilnadu State Transport Corporation (SD-I) Employees Co-operative Thrift Society, Salem.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. NANIGOUNDAN
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Venkatachalam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-46
(d) Nationality : நாட்டினம் INDIAN
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DRIVER
(g) Address : முகவரி Employee No. 4265, Driver, TNSTC, Tiruchengode Depot, (Residence : 3/820 Shanmuga Complex, Taj Nagar, SPB Colony, Erode-10.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Velusamy, Conductor/Secretary of ANNA Thozhil Sanga Peravai, TNSTC, Tiruchengode Depot.
2) Tr. Manoharan, Secretary of TNSTC (SD-I), Employees Co-operative Thrift Society, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed in separate sheets

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ A.T. JAIKUMAR ~~Rank~~ ......DSP...... ~~to take up the Investigation / Refused Investigation / transferred to PS~~..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு V. Nagaraj [signature] 5-12-2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 05/12/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
05-12-2018 at 17.30 Hrs

Name: பெயர் A.T. JAIKUMAR
Rank: நிலை ....................No. எண் ..........
Deputy Supdt. of Police, V&AC, NAMAKKAL.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

E. Subbu [signature]
HC1101
05/12/18

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/AC/2018 u/s 7(a) and 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

05.12.2018-ஆம் தேதி புதன்கிழமை மாலை 15.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், சேலம் கோட்டம், திருச்செங்கோடு பணிமனையில் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் ஈரோடு மாவட்டம், SPB காலனி-Po, தாஜ்நகரைச் சேர்ந்த வெங்கடாசலம் என்பவரின் மகன் திரு.V.நனிக்கவுண்டன் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் V.நனிக்கவுண்டன் (வயது-46), S/o.வெங்கடாசலம், பணியாளர் எண் டி.ஆர்.4265, ஓட்டுநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், திருச்செங்கோடு பணிமனை, சேலம் கோட்டம், குடியிருப்பு: 3/820 சண்முகா காம்ப்ளக்ஸ், தாஜ் நகர், S.P.B. காலனி(Po), ஈரோடு-10. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் கடந்த 2007-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய பணியாளர் எண் டி.ஆர் 4265 ஆகும். நான் தற்போது திருச்செங்கோடு பணி மனையில் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியாளர்களுக்கான தொழிற்சங்கமான அண்ணா தொழில் பேரவையில் உறுப்பினராக உள்ளேன். மேலும் நான் சேலம் கோட்ட போக்குவரத்து ஊழியர்களுக்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (சே.கோ-I) பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணயச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். எனது உறுப்பினர் எண் 8221. நான் கூட்டுறவு சங்கத்திற்கு மாதசந்தாவாக ரூ.50/- செலுத்தி வருகிறேன். அச்சங்கத்தில் சங்க உறுப்பினர்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப கடன் பெறுவர். அச்சங்கம் சேலம் சொர்ணபுரியில் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. நான் என் குடும்ப தேவைக்காக கடன் கேட்டு கடந்த 2017 செப்டம்பர் மாதத்தில் லோன் படிவம் கொடுத்தேன். லோன் படிவத்தில் தொகை எதுவும் குறிப்பிடவில்லை. எனது சம்பளத்திற்கு தகுந்தாற்போல் எனக்கு லோன் கிடைக்கும். ஒரு உறுப்பினர் லோன் பெற மற்றொரு உறுப்பினர் ஜாமீன் போடவேண்டும். அதன்படி எங்களது பணி மனையில்

டிரைவராக உள்ள சத்யசீலன் என்பவர் எனக்கு ஜாமீன்தாரராக உள்ளார். அதே சமயத்தில் அவரும் கடன் வேண்டி விண்ணப்பம் கொடுத்தார். அவருக்கு நான் ஜாமீன்தாரர் ஆவேன். மேற்படி கூட்டுறவு சங்கத்தில் மனோகரன் என்பவர் செகரட்டரியாக உள்ளார். நான் எனது லோன் விசயமாக பலமுறை சங்கத்திற்கு சென்று திரு.மனோகரன் அவர்களை சந்தித்து கேட்கும்போது அவர் பணம் தற்போது இருப்பு இல்லை பணம் வந்தவுடன் லோன் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி வந்தார். கடந்த 15.11.2018-ம் தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு நான் கூட்டுறவு சங்கத்திற்கு சென்று செகரட்டரி திரு.மனோகரன் அவர்களை பார்த்தபோது, அவர் தற்போது சங்கத்தில் பணம் உள்ளது விரைவில் உங்களுக்கு லோன் கிடைத்துவிடும் என்று சொன்னார். அதன்பின் கடந்த 01.12.2018-ம் தேதி அன்று மாலை சுமார் 4 மணிக்கு நான் கூட்டுறவு சங்கத்திற்கு சென்று செகரட்டரி திரு.மனோகரன் அவர்களை சந்தித்து லோன் என்ன ஆச்சு என்று கேட்டேன். அதற்கு அவர், அந்தந்த டெப்போ ATP (அண்ணா தொழிற் பேரவை) யூனியன் செகரட்டரி சொல்றவங்களுக்குத்தான் இங்க நாங்க லோன் கொடுக்கிறோம், அதனால நீங்க போய் உங்க டெப்போ ATP யூனியன் செகரட்டரி வேலுச்சாமியை பார்த்து அவர் கேட்கிற பணத்தை கொடுங்க, அவர் எங்கிட்ட லோன் கொடுக்க OK என்று சொன்னாதான் உங்களுக்கு லோன் கொடுக்க முடியும் என்று சொன்னார். அவர் என்னை கூப்பிட்டு உங்ககிட்ட பணம் வாங்கிட்டேன், அவர்களுக்கு லோன் கொடுத்திடலாம்னு சொன்னா இந்த மாசம் 5, 6 தேதிக்குள் ரெடியாகிடும் என்று சொன்னார். அதனால் நான் 04.12.2018-ம் தேதி மாலை சுமார் 5.30 மணிக்கு திருச்செங்கோடு டெப்போவுக்கு சென்று அங்கிருந்த அண்ணா தொழிற் பேரவை செகரட்டரி கண்டக்டர் திரு.வேலுச்சாமி அவர்களை பார்த்து எனது லோன் விசயமாக கேட்டேன். அதற்கு அவர் ஒருத்தருக்கு ரூ.3,00,000/- தான் லோன் கிடைக்கும். என்னிடம் ரூ.5,000/- பணம் கொடுத்திடு, நான் சொசைட்டி செகரட்டரி மனோகரனிடம் பேசிவிடுகிறேன், அவருக்கு சேர வேண்டிய பணத்தை அவரிடம் கொடுத்து விடுகிறேன், அவர் செக் போட்டு கொடுத்துவிடுவார், முதல்ல போய் பணம் ரெடி பண்ணிகிட்டு என்கிட்ட கொண்டு வந்து கொடு என்றும், இதை முன்னாடியே செஞ்சிருந்தா முதலிலேயே உனக்கு லோன் வாங்கியிருக்கலாம் என்றும் சொன்னார். மேலும் எனக்கு ஜாமீன் போடவேண்டிய சத்தியசீலனையும் அவரது லோனுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க ரூ.5,000/- பணம் கொண்டு வந்து கொடுக்க சொல்லும்படி என்னிடம் கூறினார். எங்களுக்கு பின்னால் லோன் அப்ளிகேசன் கொடுத்தவங்களுக்குகூட

கூட்டுறவு சங்கத்தின் செகரட்டரி மனோகரன், தொழிற் சங்க செகரட்டரி வேலுசாமியுடன் சேர்ந்து பணம் பெற்றுக் கொண்டு ஏற்கனவே லோன் கொடுத்து விட்டனர். எனக்கு அண்ணா தொழிற்பேரவை செகரட்டரி வேலுச்சாமி அவர்களிடம் ரூ.5,000/- லஞ்சமாக பணம் கொடுத்து சேலம் கூட்டுறவு கடன் சங்கத்தில் லோன் வாங்க விருப்பமில்லை. எனவே ரூ.5,000/- உடன் வேலுச்சாமி அவர்களை சந்திக்க உள்ளேன். திருச்செங்கோடு அண்ணா தொழிற்பேரவை செகரட்டரி வேலுச்சாமி மற்றும் சேலம் கூட்டுறவு கடன் சங்கத்தின் செகரட்டரி மனோகரன் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) V.Nanigoundan, 5.12.2018.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 05.12.2018-ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.14/AC/2018, u/s 7(a) and 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

அ.தி.ஜெ 05/12/18

(A.T. ஜெய் குமார்)<br>
காவல் துணை கண்காணிப்பாளர்,<br>
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,<br>
நாமக்கல்.